# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 📠 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

…தி 12 MARCH 01, 2002 பாலம் 05



வெளிவருகின்றது

ஏப்ரல் 13 முதல்

உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

காலாண்டு சஞ்சிகை



குளிர்கால ஒலிம்பிக்கில் கனடாவின் சாதனை (பக். - 6)

காப்புறுதிகள் பலவிதம், அதில் எது சிறந்தது (பக்.-13)

2002 இல் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு (பக்.- 19)

உடலின் விந்தை / கணணியின் திறமை (பக்கம்-04)

முகாமையாளரிடம் வாகனம் வாங்குவது சிறந்ததா? (பக். - 5)

வசதியான வயோதிபர்களின் வாழ்க்கை முறைமாற்றம் (பக்கம் - 02)

ஏலியன்ஸ், இந்தக் கேள்விக்கு என்னபதில்... (பக்கம் - 09)

உலகமயமாக்கும் திரைக் கலாசாரம் (பக். - 08)

படித்து அறிவாளியானவர்கள் இல்லை... படிக்காமல்.... (பக்கம்-12)






RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## உன்னை அறிந்தால்

"செய்வன திருந்தச் செய்"
சட்டம் உருவாக்கப்படும் போது அதில் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட்டதொன்று ஒரு குற்றவாளி தப்பித்துக் கொள்ளலாம், ஆனால் எந்தவொரு சுற்றவாளியும் தண்டிக்கப்படக்கூடாது என்பதாகும். அது எவ்வளவு பெரிய உண்மை. ஒரு விடயத்தைச் செய்யும் போது, அதனைப்பற்றிய பூரண அறிவு பெற்றிராவிட்டால் அது சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து சரியான முடிவு எடுப்பதே சிறப்புப்பெறும். நோக்கம் தமது தம்பட்டமாக இருந்தால் அதனை வெளிப்படுத்த விருது வியாபாரம், விருதுக் கேளிக்கை, பொன்னாடை, மாலை, பட்டம்...இவைதானா? தனிப்பட்ட நிறுவனம் / தனிப்பட்டவர் கொடுக்கும் விருதுபசாரம் அதனுடைய /அவருடைய தனிப்பட்ட செயல். இதனைப்பற்றி யாரும் கவலைப்படுவதற்கில்லை.

வியாபாரங்களை ஊக்குவிக்கின்றோம், எமக்கும் அரசியலிற்கும் தொடர்பில்லை எனக் கூறும் கூட்டம், முன்னிற்குப்பின் முரண்படலாமா? தம்மையும் தம்முடன் கூடியவர்களையும் கூட்டி அவர்களிற்கு விருது கொடுப்பதற்குப் பெயர் வேறு ஏதுமாகத்தான் இருக்கக் கூடும். பொதுவான செயல்களைச் செய்யும் போது தமது நன்மை கருதி, தமக்குக் கைதட்டுபவர்களிற்கும், படம் போடுபவர்களிற்கும், பணம் கொடுப்பவர்களிற்கும் விருது கொடுப்பதனால், அதனைத் தமக்குச் சார்பாக மாற்றிக்கொள்கிறார்கள். இதற்குத் தமது சொந்தப் பணத்திலிருந்து விருந்தோ, விருதோ கொடுக்கலாமே! இதற்கு ஒரு சங்கம் தேவையா?

காலத்திற்குக் காலம் இச்செயல் புலம் பெயர்ந்த தமிழரிடம் காணப்படுவது கவலைக்குரிய விடயம். பொதுப் பெயரை வைத்து சொந்தப் புகழைக் கருதி சொந்தங்களையும், பந்தங்களையும் வளர்க்க வேண்டும் என்றால் பொதுவான வியாபார சங்கத்திற்கு வேறு பெயர் கொடுப்பது சிறந்தது. பொதுவான விடயங்கள் பொதுவானதாகவே இருக்க வேண்டும். முன்னோடியாக இருந்து முன்மாதிரியாக நடப்பதாகக் கூறும் சங்கங்கள் எப்பொழுதுதான் திருந்துமோ!

நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!

-நெற்றிக்கண்ணன்

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- பணிவுடையவனைப் பயமுறுத்துதற்கு ஒன்றுமில்லை. அவனால் கடக்க முடியாத சூழ்நிலையும் அதுவுமில்லை.
- உயிர் வாழ்ந்திருக்க உணவைப் புசிக்கின்றோம். புசிப்பதற்காக நாம் உயிர் வாழ்ந்திருக்கிறோ மல்லோம்.
- மனிதனுக்கு மனத்தளர்வு உதவாது. அவன் உறுதி படைத்தவன் ஆக வேண்டும் தன்னையே


Singapore Communication

❖Limited time offer* ❖Reliable & Friendly Service

Only $30.00/M + Taxes

❖ 250 Min. (Free Day Time)
❖ Mon-Thu 7PM - 7 AM இலவசம் ❖ Fri 7PM-Mon 7AM இலவசம்
❖ C/W, W/M, C/F, +C/I இலவசம்
* 6PM-8AM (MON.-FRI) & WEEKENDS) ALSO AVAILABLE
More Info: Pl..Call: Sathi / Raj
Office:416 745-2378/416 740-5292 Hot Line 416 866-9700
5010 Steeles Ave.., W., Unit 17ABC
Kipling & Steeles - Deliver Arranged*




சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



London Life

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

LIBERTY MUTUAL

© 416 321-1515 / 905 294 2429 / 416 452 6975

4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் - 99

-விஜே குலத்துங்கம்



இப்போதுள்ள நவீன மருத்துவ வசதிகளாலும். முன்னேற்றம் அடைந்த வாழ்க்கை முறைகளாலும் மிக வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா. கனடா. ஜப்பான் போன்ற நாடுகளில் சராசரியாக ஒருவர் இறக்கும் வயது கூடிக் கொண்டே போகின்றது. இன்னும் இரண்டு வருடங்களில் ஜப்பான் நாட்டில் 26 சதவீதமான சனத் தொகையினர் 65 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் எனக் கூறப்படுகின்றது. இந்த வளர்ச்சி அடைந்த மேல்நாடுகளில் முதியவர்கள் அதிகமாக தனியேதான் வாழ்கின்றார்கள். வயோதிபர்கள் தனியே வாழும் போது பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இதற்காக இப்போது வளர்ச்சியடைந்த நாடுகள் வயோதிபர்களுக்காக விசேட தொழில்நுட்பத்துடன் கூடிய பலவிதமான வசதிகளும் அமைந்த வீடுகளை அமைத்து வருகின்றார்கள். சில வசதிகள் அதிக தொழில்நுட்பம் இல்லாமலும் இருக்கின்றன. அதிகமான வீடுகளில் விளக்குப் போடும் சுவிச்சுகள் சுவரில் இருக்கும் போது இலகுவாக கண்ணுக்குத் தெரிவதில்லை. இதற்காக வயோதிபர்களுக்குரிய வீடுகளில். இந்த மின்சார சுவிச்சுகள் அல்லது ஆழியைச் சுற்றி பல வர்ணப் படிகளை ஒட்டி விடுகின்றார்கள். இதனால் பார்வை குறைந்த வயோதிபர்கள் இலகுவாக சுவிச்சுகளைக் கண்டுபிடிக்கலாம். சமையலறையிலுள்ள அலுமாரிகளில் கதவுகள் இல்லாமல் பொருட்கள் இலகுவாகத் தெரியக் கூடியதாகவும். குனியாமலும் உயரத்தில் இல்லாமலும். கைக்கு அண்மையில் இருக்கக் கூடியதாகவும் அமைக்கப்படுகின்றன.

மின்சாரத்தால் தண்ணீர் சுட வைக்கும் மின்சாரக் கேத்தில்கள் இப்போது பிளாஸ்திக்கினால் செய்யப்படுகின்றன. சில முதியவர்கள் இதைத் தவறுதலாக சூடான அடுப்பில் வைத்து சூடாக்க முயன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் இந்த வயோதிபர்களுக்காக இந்த மின்சாரக் கேத்தல்கள் உலோகத்தினால் செய்யப்படுகின்றன. இவை அடுப்பில் வைத்தாலும் வெப்பத்தால் பாதிக்கப்படமாட்டாது. இவற்றைவிட தொழில்நுட்பம் அதிகமாவுள்ள அமைப்புகளும் உள்ளன. முதியவர்கள் அதிகமாக திறப்புக் கோர்வை. மணிபர்ஸ். மருந்துப் போத்தல்கள் போன்றவற்றை எங்கே வைத்தோம் என்று தெரியாமல் தேடுவார்கள். இதற்காக முதியவர்களுக்காக ஒரு புதிய விசேட அமைப்பொன்றைத் தயாரித்து உள்ளார்கள். சுவரில் இருக்கும் ஒரு PANEL அல்லது ஒரு சட்டம் ஒன்றினுள் இந்தத் திறப்புக் கோர்வை, காசுப்பை. போத்தல் போன்றவற்றின் படங்கள் இருக்கும். நீங்கள் தேடும் அந்தப் பொருளின் படத்தில் விரலை வைத்து அழுத்தினால், தேடும் பொருளிலிருந்து ஒரு சமிஞ்சை ஒலி கிளம்பும். இதற்காக அப்படியான பொருட்களில் ஒரு விசேட அமைப்பு பொருத்தப்பட்டிருக்கும். எனவே எழுப்பப்படும் சத்தத்தை வைத்து அந்தப் பொருள் எங்கே ஒளிந்திருக்கின்றதென்பதைக் கண்டுபிடிக்கலாம்.

குளியலறையில் தொட்டியினுள் SENSOR அல்லது உணர்த்திகள் பொருத்தப்பட்டிருக்கும். தொட்டியை நிரப்ப பைப்பை திறந்துவிட்டால். தொட்டி நிரம்பியவுடன் SENSOR அதை உணர்ந்து பைப்பை தானாக மூடிவிடும். அத்துடன் ஒரு ஒலியை எழுப்பி வீட்டுக்காரருக்கு அதைத் தெரிவிக்கும். இதனால் தொட்டி நிரம்பி வெளியில் வழிவது தடுத்து நிறுத்தப்படும். முகம். கை கழுவும் SINK எனப்படும் தொட்டியிலும் SENSOR கள் அல்லது உணர்த்திகள் பொருத்தப்பட்ட பைப்புகள் பொருத்தப்பட்டிருக்கும். சில முதியவர்களுக்கு பைப்புகளைத் திறந்து மூடுவது கஷ்டமாக இருக்கும். சிலர் பைப்புகளைச் சரியாக மூடிவிடமாட்டார்கள். இதனால் தண்ணீர் வீணாகிவிடுகின்றது. இந்த உணர்த்திகள் பொருத்தியுள்ள பைப்புகளைத் திறந்து மூடத் தேவையில்லை. பைப்பின் கீழாக கையைக் கொண்டு சென்றால். பைப்புத் தானாக திறந்து நீரைக் கொட்டச் செய்யும். கையை அகற்றிவிட்டால் நீர் வருவது நின்றுவிடும். முதியவர்களின் மலசல கூடத்திலும் உள்ள கொமோட் எனப்படும் இருக்கைகளிலும் உணர்த்திகள் பொருத்தப்பட்டிருக்கும். ஒருவர் அதில் அமர்ந்துவிட்டு பின்னர் எழும்பும் ரோபது அது தானாக Flush செய்கின்றது. அதாவது தண்ணீரைப் பாய்ச்சி சுத்தம் செய்துவிடும். படுக்கையறைகளிலும் பல இடங்களில் இந்த உணர்த்திகள் பொருத்தப்பட்டிருக்கும். ஒருவர் படுக்கையில் படுத்திருந்து இரவில் எழுந்து மெத்தையின் மேல் இருக்கும் போது. படுக்கை விளக்குகள் தானாக எரியும். இருட்டில் எழுந்து இதற்கான சுவிச்சைத் தேடவேண்டிய அவசியம் இல்லை. பின்னர் அவர் எழுந்து நடக்கும் போது பாதையிலுள்ள விளக்குகள் தானாக எரியும். நள்ளிரவில் ஒருவர் எழுந்து. மலசல கூடத்திற்கு செல்ல வேண்டுமானால். படுக்கை விளக்குகளில் இருந்து மலசல கூடம் வரை உள்ள பல விளக்குகள் தானாக எரியக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

வீட்டிலுள்ள பல அமைப்புகள். மத்தியில் அமைந்துள்ள ஒரு மின்கணணித் தொகுதியுடன் இணைக்கப்பட்டிருக்கும். இந்த மின்கணணிக் குரல் மூலம் சில அறிவுறுத்தல்களைச் செய்யக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக ஒரு அடுப்பு நீண்ட நேரமாக எரிந்து கொண்டிருந்தாலோ, குளிர்சாதனப் பெட்டியின் கதவு சரியாக மூடப்படாமல் இருந்தாலோ, அல்லது வீட்டிடன் கதவு, ஜன்னல்கள் மூடப்படாமல் இருந்தாலோ இந்த மின்கணணி குரல் மூலம் இது பற்றி வீட்டுச் சொந்தக்காரருக்கு அறிவிக்கும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு வீட்டுச் சொந்தக்காரரிடம் இருந்து அதற்குரிய பதிலையோ, கட்டளையையோ அல்லது எந்தவித சைகையேனும் பெறாவிட்டால். மின்கணணி உடனே 911ஐ அழைக்கும். ஏனெனில் முதியவர்களுக்கு எந்நேரமும் ஏதாவது அசம்பாவிதங்கள் நடக்கலாம். எனவே இந்த மின்கணணி இவர்களை எந்நேரமும் அவதானித்த வண்ணம் இருக்கும். சில முக்கிய நோய்கள் உள்ள முதியவர்களுக்கு கையில் ஒரு விசேட தொழில்நுட்பக் கருவிகள் இணைக்கப்பட்ட ஒரு காப்பு மாதிரியான அமைப்பு இணைக்கப்பட்டிருக்கும். இக்கருவி அம் முதியவரின் உடல்நிலை பற்றிய தகவல்களை மின்கணணிக்கு அனுப்பிக்கொண்டிருக்கும். உடல்நிலை மோசமடைந்தால் மின்கணணி இதுபற்றி வைத்தியசாலைக்கோ அல்லது அவசரம் என்றால் 911 இக்கோ இது பற்றி அறிவிக்கும். இது போன்ற அதிநவீன வசதி கொண்ட முதியவர்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு இப்போது பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. சக்கர நாற்காலியில் நடமாடுபவர்களுக்காகவும் விசேட அமைப்புகள் கொண்ட வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எவ்வளவு நவீன வசதிகளுடன் வீடு அமைக்கப்பட்டாலும். கூடவே உறவினர் இருந்து கவனிப்பது போல. முக்கியமாக பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கவனிப்பது போல் இருக்கமாட்டாது.

*******************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.







# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility





Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


# முத்துச் சிப்பி



உலகத்தமிழர் செஞ்சோலைச் சிறார் வட்டம் நடத்திய "முத்துச்சிப்பி" என்னும் நிகழ்ச்சி பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி 2002ஆம் ஆண்டு மாலை 5மணி 30 நிமிடத்திற்கு Jane & Finch சந்திப்பற்கு அருகில் இருக்கும் விமிகா மண்டபத்தில் நடைபெற்றது. முற்று முழுதாக சின்னஞ் சிறுவர்களைக் கொண்டு நடந்த இந்த நிகழ்ச்சிக்கு ஆரம்பத்தில் சிறுமி செல்வி மிராளினி சிவநாதன் அறிவிப்பாளராக இருந்தார்.



தமிழ் கனேடிய தேசிய கீதத்துடன் ஆரம்பமான நிகழ்ச்சி தாயகத்தில் மறைந்த வீரர்கள், பொதுமக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தி தொடர்ந்தது. பிரதேச பொதுசெயலாளர் பாபு திருக்குமார் அவர்கள் ஈகைச் சுடர் ஏற்றிவைத்தார். அதைத் தொடர்ந்து Jane & Finch பகுதிச் செஞ்சோலை சிறுவர்களின் தமிழ்மொழி வாழ்த்தாக பாரதியாரின் "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே" என்ற பாடல் பாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து காசி ஆனந்தனின் தமிழீழ வாழ்த்துப் பாடலைச் செல்வி நிதர்சிகா உதயகுமார் பாடினார்.

இப்பாடலைத் தொடர்ந்து புலிமாமாவை அழைத்த சிறுவர்களுடன் புலிமாமா (புலிவேடம் அணிந்தவர்) நடனம் ஆடி மகிழ்ந்தார். புலிமாமாவின் வரவிற்குப் பின்னர் திரு. வாசு சின்னராசாவின் மாணவி செல்வி நிர்த்திகா சித்திர வடிவேல் "புஷ்பாஞ்சலி" நடனம் ஆடிப் பார்வையாளர்களை மகிழ்வித்தார்.

இதன் பின்னர் நிவேதா இராமலிங்கம், கவிதா றெஜினோல்ட் இருவரது நடனமும், மாசி மாதம் பிறந்த செஞ்சோலை சிறுவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டமும் நடைபெற்றது. இவற்றைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள், நடனம், பேச்சு என்பன தொடர்ந்து நடைபெற்று இச் சிறுவர்களது விழா இனிதாக நிறைவெய்தியது.

தொகுப்பு - சிவ ஞானநாயகன்


## ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிஷன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

## நியூ மிலேனியத்தில்

ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair

NTE AUTO INC.
New Trade Engineering

என். ரி. இ. ஒட்டோ இங்க்

சிவபாலன்

CONTACT: SIVABALAN
☎: (416) 750 - 1573
151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



IN NEW MILLENNIUM WE ARE ENTERING 10TH YEAR SERVICE IN SCARBOROUGH

## DAYCARE AVAILABLE

JANE & FINCE

பகுதியில் 9 மாதக் குழந்தையிலிருந்து பாடசாலை செல்லும் உங்கள் பிள்ளைகள் பராமரிக்க அழையுங்கள் திருமதி. சுரேஷ். திங்கள் முதல் ஞாயிறு வரை, எந்தநேரமும் பராமரிக்கும் வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு:(416) 635-5664

# ஆரோக்கிய வாழ்வு (73)



- N. செல்வசோதி

## மனித உடலின் விந்தைகள்

1. ஒரு கம்யூட்டரைவிட அதிக செய்திகளை நமது நினைவில் தேக்கி வைத்துக் கொள்ள முடியும்.

2. நமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களை ஒரே நேர் வரிசையில் வைத்தால் பூமியை இரண்டு தடவைகள் சுற்றி வரக் கூடிய நீளமானதாக இருக்கும்.

3. ஒரு சாதாரண மனிதன் தன் வாழ் நாளில் உட்கொள்ளும் உணவு முப்பதாயிரம் கிலோ அளவு இருக்கும்.

4. நமது தசைகள் உண்டாக்கும் வெப்பம் ஒரு லீட்டர் நீரை ஒரு மணிநேரம் கொதிக்க வைக்கப் போதுமானது.

5. மூக்கு எயர் கண்டிஷன் போல செயல்ப்படுகிறது. ஒரு நாளில் இதன் வழியே செல்லும் காற்று 14 கனமீட்டர் ஆகும்.

6. இரத்தத்தில் 91 சதவீதம் நீர் தான்.

7. கண்களை மூடிக்கொண்டு நேராக நடக்க முடியாது.

8. தலைமயிர் ஆண்களைவிட பெண்களுக்கே மிக வேகமாக வளரும். கோடையில் வளர்ச்சியின் வேகம் அதிகம். ஒரு அடிவரை வளர்ந்ததும் வளர்ச்சி வேகம் பாதியாகும். தலைமயிரின் ஆயுள் சாதாரணமாக இரண்டு வருடம். பின் அது உதிர்ந்து விடும். அடுத்து அதே இடத்தில் இன்னொன்று முளைக்கும்.

9. வழுக்கை விழுவது பரம்பரை வாகுதான் . கல்சியம் காரணமாக மண்டையோட்டின் எலும்பு வளர்ச்சி அதிகமானதும் வழுக்கை விழும். பெரும்பாலும் பெண்களுக்கு வழுக்கை விழுவதில்லை.

10. சிறுகுடல் 22 அடி நீளமானது. அதனை விரித்து பரப்பி வைத்தால் 360 சதுர அடி வரையாகும். ஆனால் உடலுக்குள் இது 8 அடியாகச் சுருங்கி அமைந்துள்ளது.

11. சாதாரணமாகப் பெண்கள் 15 வயதின் பின்பும் ஆண்கள் 18 வயதின் பின்பும் வளர்வதில்லை. அந்த வயதில் எவ்வளவு உயரமாக இருக்கிறார்களோ அதுதான் முடிவு. எலும்புகள் யாருக்கும் 22 வயதின் பின்பு வளர்வதில்லை.

12. ஒரு குழந்தை தனது இரண்டாவது பிறந்த நாளன்று என்ன உயரம் இருக்கிறதோ அதைவிட இரண்டு மடங்குதான் வளர்ச்சியடைந்ததும் உயர அளவு என்று அண்ணளவாக மதிப்பிடலாம். ஆண் வளர்ந்த பிறகுள்ள உயரத்தில் 49.5 வீதமாகவும் இரண்டு வயதில் இருப்பான். பெண் வளர்ந்த உயரத்தில் 52.8 சதவீதமாகவும் இருப்பான்.


13. உடலில் வெப்பம் எப்போதும் ஒரே அளவாக இருக்குமென்று கூறமுடியாது. ஒரு நாளில் இது 2 Degree வித்தியாசப்படலாம். நள்ளிரவில் குறையும். நடுப்பகலில் கூடும். இந்தச் சிறிய வேறுபாட்டைக் கொண்டு உடல் நலம் கெட்டுவிட்டதாகக் கருதக் கூடாது.

14. பெண்களுக்கு மாத விலக்கின் போது உடல் வெப்பம் அதிகமாக இருக்கும். முற்பகுதியைவிட பிற்பகுதியில் வெப்பம் அதிகரிக்கும்.

15. மூளையின் அளவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் சம்மந்தமே கிடையாது. பெண்களைவிட ஆண்களுக்கு மூளை அளவு சற்றுக் கூடுதலாக இருக்கும். ஆனால் இருபாலாருக்கும் உடல் எடையில் அதன் விகிதம் ஒன்றுதான்.

16. ஒருவர் இரவில் எட்டு மணி நேரம் தூங்குகிறாரென்றால், அதில் இரண்டு மணிநேரம் கனவில் கழிகிறது. தூக்கம் தொடங்கி ஒரு மணி நேரத்தில் கனவு தொடங்குகிறது. இவ்வாறு நான்கு இடைவெளிகளில் கனவு உண்டாகின்றது. தூங்கும் போது கனவு காண்பதை REM தூக்கம் என்பார்கள். அதாவது (*Rapid Eye Movement*) அப்போது மூடிய இமைகளுக்குப் பின்னே விழிகள் அசையும்.


**யோகா சோதிடம்**



★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361

தமிழர் நிர்வாகத்தில்

ஒரு



**EMBASSY**

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



சமோசாவிற்கு அழையுங்கள்
T.P 416-332-0944
5 SAMOSA $1.00

*Embassy* அமைந்துள்ள இடம்: *FINCH / MIDDLEFIELD,*
*5200 FINCH AVE.,* SCARBOROUGH.
☎: (416) 332-8451

## உங்களுக்குத் தெரியுமா?



### வாகனம் வாங்கும் போது

1. பொதுவாகவே வாகனம் வாங்கும் போது மனேஜரிடம் வாங்கினால் குறைந்த விலை கிடைக்கும் என்று பலரும் நினைப்பது உண்டு. ஆனால் உண்மை அதுவல்ல. அதற்கு எதிர்மாறானது என்பது தான் உண்மையாகும்.

2. உங்கள் வாகனத்தை Trade பண்ணி புதிய வாகனத்தை பெறும்போது மிக முக்கியமான ஒன்றை நீங்கள் கருத்தில் கொள்ளல் வேண்டும். உங்கள் Trade வாகனத்திற்கு Tax உம் கிடைக்கிறது. அதாவது உங்கள் வாகனம் $10.000 என்று Trade கிடைத்தால் உண்மையில் கிடைப்பது $11.500 ஆகும். அதேவேளை உங்கள் வாகனம் $5000 க்கு குறைவாக இருப்பின் வெளியில் விற்பதால் அதிகளவு தொகை கிடைக்கும்.

3. உங்கள் பணம் பெற்றுத் திருப்பி வழங்கும் முறை சிறப்பில்லாமல் இருப்பின் (Credit) வீடோ. வாகனமோ கடன் எடுத்து ஒழுங்காகக் கட்டுவதன் மூலம் உங்கள் கிரடிட்டை சிறப்பாக்கலாம்.

4. Winter காலத்தில் 5w30 oil ஐ பாவிப்பதன் மூலம் Starting இலகுவாகும் என்பதோடு நல்லதுமாகும்.

5. பலர் உண்மையறியாது பல Dealer களிடம் தங்களிற்கு வாகனம் வாங்கச் சென்று, போட்ட Deposit ஐ இழந்திருக்கின்றனர். எந்த dealer உம் உங்களின் deposit ஐ வைத்திருக்க முடியாது. ஏமாறாதீர்கள். இதைப் பற்றி அடுத்த முறை விபரமாக தருகிறேன்.

6. எந்த ஒரு dealer உம் உங்களுக்கு வாகனத்தை விற்கும் போது அவ்வாகனம் விபத்துக்குள்ளானதா அல்லது வாடகைக்கு உபயோகிக்கப்பட்டதா (Rental) என்பதை உங்களுக்கு வாய் மூலமும் எழுத்து மூலமும் விளக்கி நீங்கள் அதில் கையொப்பம் இட்டு இருக்க வேண்டும். அப்படியல்லாது வாகனங்களை விற்றிருந்தால் நீங்கள் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யலாம். பலர் இப்படி ஏமாந்துள்ளார்கள்.


7. யாரும் கூட்டிச் சென்று நீங்கள் வாகனம் வாங்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களை கூட்டிச் செல்பவர்? எனது அனுபவம்.

தொடரும்....

மேலதிக விபரங்களுக்கு
சோதீஸ் - 416 704-1179


YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.


CUSTOM MADE....
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(905) 201-7733
(416) 419-9247

FREE ESTIMATE

நியூ சங்கர் அன்கோ

MONEY TRANSFER
- வவுனியா
- மன்னார்
- திருகோணமலை
- யாழ்ப்பாணம்
- கொழும்பு
- ஐரோப்பிய நாடுகள்
- சென்னை





* Rice Cooker (Panasonic)
* Roti Maker
* Sumith Grinder
* Ultra Grinder
* Steamer
* Cook Wear Set
* Pressure Cooker
* Milk Boiler






- புதிய பழைய பாடல்கள், படங்கள் V.C.D, DVD இல் பெற்றுக் கொள்ளலாம்.
- புதிய பழைய இடைக்கால பாடல்கள் Audio Cassette, C.D இல் பெற்றுக் கொள்ளலாம்.
- கர்நாடக இசைக் கச்சேரிகள். வயலின், புல்லாங்குழல், தவில், நாதஸ்வர கச்சேரிகள்.






- திருமுருக கிருபானந்தவாரியர் சொற்பொழிவுகள் (மகாபாரதம் 10 Vol.) (இராமாயணம் 8 Vol.) சகலதும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

* Video Transfer - Any System to Any System
* All Celebrations - VHS to DVD Transfer Avail.
* Citizen, Seiko and Different Colour Cover Watches Avail.
* Fancy Item (New Style)
* Gift Item - Toys
* New Born Gift Item


திருமணப் பெண் அலங்காரம்
* Hair Style. சாறி பிளீட் பண்ணிக் கொடுத்தல்
* சடை நாகம்
* மாலை - ஆண்டாள் மாலை
* பூச்செண்டு, கிறிஸ்தவ Veil வாடகைக்குக் கொடுக்கப்படும்.



New Shankar & Co.
2365 Eglinton Ave., Scar.
T.P (416) 750-2370

# விளையாட்டுத் தகவல்கள் (94)

-எஸ். கணேஷ்



நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் குளிர்கால 19வது ஒலிம்பிக் போட்டிகள் 17 நாட்கள் தொடர்ந்து SALT LAKE CITY என்னும் அமெரிக்காவில் உள்ள நகரில் இனிதே நடைபெற்று முடிந்துள்ளது. பல்லாயிரக் கணக்கான இரகசிகர்களுடன் சேர்ந்து கனேடிய தேசிய நீரோட்டத்தில் கலக்கும் பல ஆயிரம் கனடா வாழ் தமிழ் மக்களும் கண்டு களித்தனர்.




1998 ஆம் ஆண்டு நாகனோ (NAGANO) நகரில் நடைபெற்ற போட்டிகளை எம்வர்கள் பலரும் மறந்துவிட முடியாது. 2002ஆம் ஆண்டு கனடாவின் சரித்திரத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்க வேண்டிய சரித்திரம் படைக்கும் ஆண்டாக உள்ளது. முன்னெப்பவும் இல்லாதவாறு கனடா முதன் முதலில் 17 பதக்கங்களை பெற்றுள்ளது. இதில் 6 தங்கப் பதக்கங்களும், 3 வெள்ளி பதக்கங்களும், 8 வெண்கலப் பதக்கங்களும் அடங்கும். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல் கனேடிய மக்களின் இரத்ததில் உறைந்து இருக்கும் ஒரு விளையாட்டான ICE HOCKEY இல் ஆண்களும், பெண்களும் அமெரிக்காவை மண்கவ்வச் செய்துள்ளனர்.

"தங்கத்தை வென்ற தங்கமெடி" Golden கூந்தலை உடைய கனேடிய பெண்கள் அமெரிக்காவைத் தோல்வி அடையச் செய்துள்ளன.ர் இதுவரை காலமும் 8 தரம் தோல்வியையும் 3 தரம் வெள்ளியையும் பெற்ற கனேடிய பெண்கள் மிகவும் பலம் பொருந்திய அமெரிக்க அணியை ஒலிம்பிக் போட்டியில் தோல்வி அடையச் செய்து கனடாவின் மககளை மிகவும் மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்துள்ளனர். பெண்களுக்கு நாம் மிகவும் சளைத்தவர்கள் இல்லை என்று ஆண்கள் அணியும் அமெரிக்காவை மண்கவ்வச் செய்துள்ளது. அமெரிக்கர்களுக்கு இது ஒரு பலத்த அடி. இதில் மேலும் சிறப்பென்னவெனில் குண்டான் சட்டிகுள் குதிரை ஓடும் அமெரிக்கர்கள் அதுவும் இறுதியாட்டத்தில் ஆண்களிடமும், பெண்களிடமும் பலத்த அடி வாங்கியுள்ளனர்.

1952ஆம் ஆண்டின் பின் கனடா ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை 50 ஆண்டுகளின் பின்பு பெற்றுள்ளது. 1932ஆம் ஆண்டின் பின்பு ஒலிம்பிக் போட்டிகளில் ICE HOCKEY இல் தனது சொந்த மண்ணில் தோல்வியே கண்டிராத அமெரிக்க அணி 70 வருடங்களின் பின்பு தனது சொந்த மண்ணில் தோல்வி கண்டுள்ளது. "வெற்றி மேல் வெற்றி வந்து எம்மைச் சேரும் அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் MAPLE LEAF ஐச் சேரும்" ரொறன்ரோ MAPLE LEAF அணியின் Coachஆன Pat Quinn பயிற்சியின் கீழ் கனேடிய அணி 50 வருடத்தின் பின் தங்கத்தை வென்றுள்ளது. கனேடிய அணியின் வீரர் Sakic இரண்டு கோல்களைப் போட்டு 5 - 2 என்ற ரீதியில் வென்றது மட்டுமல்லாமல் Olympic இல் Hockey ஆட்டங்களின் தொடரில் MVP விருதையும் வென்று உள்ளார்.

1920, 1924, 1928, 1932, 1948, 1952, 2002 கனடா தங்கப் பதங்களை வென்றது. நான்கு தடவை (1920 - 1932) தொடர்ந்து ஒலிம்பிக்கில் கனடா தங்கப் பதக்கத்தை வென்றது குறிப்பிடத்தக்கது. 1936, 1960, 1992, 1994 கனடா வெள்ளிப் பதக்கத்தையும் 1968ஆம் ஆண்டு வெண்கலப் பதக்கத்தையும் வென்று இதுவரை சரித்திரம் படைத்துள்ளது.




J.A.B. TRAVELS & TOURS
Top Sales Award for Cathy pacific
ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்
J.A.B TRAVELS & TOURS.
1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ONT. ☎: (905) 896-8320
2390 Eglinton Ave. E., #211, Scarborough, Ont. ☎: (416) 759-3533

COMPUTER REPAIR & INSTALLATION
* REPAIR
* HARDWARE INSTALLATION
(You buy the parts we install it)
* SOUND CARD ($14.99)
* NETWORK CARD ($14.99)
* MODEM CARD ($14.99)
* MEMORY ($14.99)
* VIDEO CARD ($14.99)
* CD ROM ($14.99)
* HARD DRIVE ($14.99)
* CDR-RW ($14.99)
* AND MUCH MORE
* SOFTWARE INSTALLATION
* SETUP HOME NETWORK
(hardware not included ($49.99)
PLACE: 720 KENNEDY ROAD
(KENNEDY & EGLINTON)
T.P: 416-265-2319

2002ஆம் ஆண்டின் - ஒலிம்பிக்கில் மொத்தப் பதக்கங்கள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | | பதக்கங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. ஜேர்மனி | 12 | 16 | 7 | = | 35 |
| 2. அமெரிக்கா | 10 | 13 | 11 | = | 34 |
| 3. நோர்வே | 11 | 7 | 6 | = | 24 |
| **4. கனடா** | **6** | **3** | **8** | **=** | **17** |
| 5. ரஷ்யா | 6 | 6 | 4 | = | 16 |
| 6. அவுஸ்ரேலியா | 2 | 4 | 10 | = | 16 |
| 7. இத்தாலி | 4 | 4 | 4 | = | 12 |
| 8. பிரான்ஸ் | 4 | 5 | 2 | = | 11 |
| 9. சுவிஸ்லாந்து | 3 | 2 | 6 | = | 11 |
| 10. கொலண்ட் | 3 | 5 | 0 | = | 8 |

**2002ஆம் ஆண்டு கனடா வென்ற தங்கப் பதக்கங்கள்: (6)**


1. WOMENS HOCKEY
2. MENS HOCKEY
3. FIGURE SKATING (ஆண் / பெண்) JAMIE SALE & DAVID PELLETIER
4. LONG - TRACK SPEED SKATING (5000M) CATRIONA
5. SHORT - TRACK SPEED SKATING (500M) MARC GAGNON
6. SHORT - TRACK SPEED SKATING (5000M RELAY)

**2002ஆம் ஆண்டு - வெள்ளிப் பதக்கங்கள் (3):**

1. MENS CURLING
2. FREE STYLE SKIING
3. SHORT - TRACK SKATIONG (500M)

**2002ஆம் ஆண்டிற்கான வெண்கலப் பதக்கங்கள் (8):**

1. CROSS - COUNTRY SKIING
2. WOMENS CURLING
3. FREESTYLE SKIING
4. LONG TRACK SPEED SKATING (3000M)
5. LONG - TRACK SPEED SKATING (5,000M)
6. SHORT - TRACK SPEED SKATING (1,000M)
7. SHORT - TRACK SPEED SKATING (1,500M)
8. SHORT - TRACK SPEED SKATING (3,000M RELAY)



"பணம் பாதளம் வரை பாயும்" என்பது முதுமொழி. அனைவரும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த FIGURE SKATING இல் கனேடிய ஜோடியான Jamie உம் David உம் மிகவும் திறமையாக ஆடியது கண்கூடு. ஆனாலும் பிரான்ஸ் நாட்டு ஒருவர் கனடாவுக்கு புள்ளிகள் வழங்காது ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டமையால் பிரான்ஸ் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

26 வயதுடைய கனேடிய வீரரா[illegible] GANON இம் முறை இரண்டு தங்கப் பதக்கங்களையும் ஒரு வெண்கல பதக்கங்களையும் வென்று அதிகூடிய பதக்கங்களை வென்ற முதலாவது கனேடிய வீரர் ஆவர். போட்டிகளை முடிக்கும் இறுதி நாள் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறுதியில் OLYMPIC கொடி இறக்கப்பட்டு இத்தாலி கொடி ஏற்பட்டு 2006ஆம் ஆண்டு WINTER OLYMPICS நடைபெற இருக்கும் இத்தாலி நாட்டு TRINO நகர மேயரிடம் OLYMPIC கொடி உத்தியோகப் பூர்வமாக கையளிக்கப்பட்டது.

"வந்தோரை வாழ வைக்கும்" கனேடிய நாடும் கனேடிய வீரர்களும் மேன்மேலும் வெற்றிகளைப் பெற வாழ்த்துவோமாக!

GO CANADA GO !!!

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ்த் திரைப்படங்கள்

–தொகுப்பு - பரம்

### *1986ஆம் ஆண்டில் வெளிவந்த படங்களின் தொடர்ச்சி*

விஜயகாந்த் - 8 படங்கள்

1. அம்மன் கோயில் கிழக்காலே
2. ஊமை விழிகள்
3. ஓர் இனிய உதயம்
4. தர்ம தேவதை 5. தழுவாத கைகள்
6. கரிமேடு கருவாயன்
7. மனக்கணக்கு
8. அன்னை என் தெய்வம் (30)




ஊமைவிழிகள் - திரைப்படக் கல்லூரியினர் ஆபாவாணன், அருண்பாண்டியன் ஆகியோரின் தயாரிப்பில் புதுமைப்படமாக வெளிவந்தது இப்படம் ஆகும். இப்படத்தில் விஜயகாந், சந்திரசேகர், ஜெயசங்கர், தேங்காய் சீனிவாசன், எஸ் ஆர். துளசி, ரவிச்சந்திரன், கார்த்திக் முதலானோர் சேர்ந்து நடித்துள்ளனர். இப்படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் திரைச் சிற்பி ஆபாவாணன். இந்தப் பட வெற்றிக்குப் பிறகு புதுப்புது இயக்குனர்களை விஜயகாந்த் திரையுலகத்திற்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.



கல்லூரி மாணவர்கள், பொறுமையைக் கடைப்பிடித்து, எதிர்ப்புக்களையும் கேலிப் பேச்சுக்களையும் பொருட்படுத்தாது உருவாக்கி வெற்றியடைந்த படம். இரசிகர்கள் இந்தக் கலைஞர்களின் திறனை வரவேற்று ஊக்கமளித்தது குறிப்பிடத்தக்கது. 100 நாட்கள் ஓடிய வெற்றிப் படம்.


UNITED PERSONAL INJURY ASSOCIATES

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பனும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரதியாகவிருந்தாலும், பேருந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு **$1000.00** வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*

ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்


**தீபன் - 416-505-9804**

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 75 Collier St., Unit A, Barrie
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main St. East, 1st Floor, Hamilton




ACTION HONDA

புதிய பழைய
**HONDA, VOLVO**
மற்றும் **CHRYSLER**
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது



- எங்கும் கிடைக்காத குறைந்த விலை
  **I will beat any price**
- ஆயுள் காலத்திற்கு
  Oil Change இலவசம்
  **Life time Oil change**
- சிறந்த நேர்மையான சேவை
  **Best Service**






*Call me Now!!* **416-704-1179**

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்


Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough






பூட்டு? சாவி?

KEERTH LOGSMITH



வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தாமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க
வேண்டிய தொலைபேசி இலக்கம்

416-439-3709 Pager: 375-7330





Kiruba Kirushan
*Service with a Broad Smile*

EASY HOME BUY

வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.

Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!

With a small down payment, you could own your dream home.



FOR ALL YOUR HOUSING NEEDS CALL
**416-414-5562**



ஞானம்ஸ் ஸ்ருடியோ



**Introducing 1 Hour Photo Lab:**
**3x5 & 8 x 12**
*Professional Photographer* - கதிர்
☎: 416 - 750 - 8118
2381 Eglinton Ave., E.
KENNEDY / EGLINTON, SCARBOROUGH

# தூறல்

## உலகமயமாக்கலும் "திரை" கலாசாரமும்
## *Globalization and the movie culture*

உலகமயமாக்கல் இன்று உலக நாடுகள் அனைத்தையும் தொற்றிக் கொண்டுள்ளது. சோவியத் யூனியனின் வீழ்ச்சி. இதற்கான இறுதி வெற்றிப் படியை அமைத்துக் கொண்டுள்ளது. இன்று கியூபா. வடகொறியா போன்ற ஒரு சில நாடுகள் தவிர்ந்த. சீனா உட்பட இதன் காலடியில் உள்ளது.

உலகமயமாக்கலின் வெற்றி என்பது கலாசார ரீதியான மாற்றங்களிலும் பிரதானமாகத் தங்கியுள்ளது. ஒரு கலாசாரம் என்பது பல வகைகளில் சந்தைப் படுத்தலுக்கும். சந்தைகளை பெருப்பிப்பதற்கும் அடி கோலும்.

உணவு. உடை. அணிகலன்கள் போன்றன இந்தக் கலாசாரத்தின் அடிப்படைகள். இந்த அடிப்படைகளின் மாற்றத்தை தீர்மானிப்பதற்கு காரணமாக அமைபவை *Media* அல்லது வெகுசனத் தொடர்பு சாதனங்கள். வெகுசனத்தொடர்பு சாதனங்களின் ஊடகங்கள். விளம்பரங்கள். திரைப் படங்கள். தொலைக் காட்சிகள். பத்திரிகைகள். இசை போன்றன. இன்று நூற்றுக்கு நூறு வீதமான வெகுசனத் தொடர்புசாதனங்கள் பெரிய வணிக நிறுவனங்களின் கைகளில் உள்ளன.

இவை புதிய (?) மேற்கத்திய கலாசாரத்தை உலகெங்கும் பரப்புகின்றன. இதன் மூலம் இவர்கள் பெரிய சந்தையைக் கைப் பற்றுகிறார்கள். உதாரணமாக கடந்த பத்து வருடங்களில் இந்தியாவில் எத்தனை அழகிப்போட்டிகள் (*Beauty Queen Contest*) நடந்துள்ளன. எத்தனை இந்தியப் பெண்கள் உலக அழகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்? என்பதை கணக்கிலெடுத்துப் பார்த்தால் இதன் உண்மை புலப்படும். சீனாவுக்கு அடுத்ததாக இந்தியா மிகப் பெரிய சந்தை. இங்குள்ள ஒவ்வொரு பெண்ணும், விதவிதமான நிறங்களில் உதட்டுச்சாயம் பூசினால் யாருக்கு இதனால் இலாபம்? உங்களுக்கே புரியும்.

இலங்கையில் சுதந்திரக் கட்சியின் ஆட்சியின் போது (1970 களில்) தாராள இறக்குமதித் தடை செய்யப்பட்டது. இதன் விளைவு பொருளாதார முன்னேற்றம் மறுபுறம். இலக்கிய ரீதியாக பல புதிய படைப்பாளிகள் உருவாக்கப்பட்டனர். ஒருசில இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களும் வெளியாகின. ஆனால் அன்றும் சரி. இன்றும் சரி. திரைப்பட உலகில் இலங்கைத் தமிழர்கள் சுயம் இறந்து காணப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் இந்திய - தமிழ்நாட்டுத் திரைப்படங்களின் வருகையே. வானொலி ஒரளவுக்கு சுயத் தன்மை பேணப்பட்டாலும் திரைப்படப் பாதிப்பு விட்டு வைக்கவே இல்லை.

ஆனால் அமெரிக்காவுக்கு அருகில் உள்ள கனடா எவ்வாறு சுய தன்மையை பாதுகாக்க முற்படுகிறது என்று பார்த்தால் ஆச்சரியமே. ஒளி / ஒலி பரப்பு நிலையங்களின் 60% மான நிகழ்ச்சிகள் கனடாவில் தயாரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். வெளிநாட்டுத் தொலைக் காட்சி அலை வரிசைகளின் நிகழ்ச்சிகளில் 50% ஆனவை கனடியத் தயாரிப்பு நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை கொண்டிருக்க வேண்டும். அதேபோல் 35% ஆன இசை. பாடல்கள் கனடிய இசைக் கலைஞர்களது படைப்புக்களாக இருக்க வேண்டும்.

பிரான்ஸில் 40% ஆன நிகழ்ச்சிகள் பிரெஞ்ச் மொழியிலானதாக இருக்க வேண்டும். 60% ஆன நிகழ்ச்சிகள் ஐரோப்பிய தயாரிப்பு நிறுவனங்களினதாக இருக்க வேண்டும். இதே போன்ற நிலை *Hungary, Poland, Czech* போன்ற நாடுகளிலும் உள்ளது. ஆனாலும் கனடாவில் விற்கப்படும் ஆறு சஞ்சிகைகளில் ஐந்து அமெரிக்க சஞ்சிகைகளாக உள்ளது. அத்துடன் புதிய தொழில்நுட்ப வசதி சட்ட திட்டங்களை மீற உதவி செய்கிறது.

திரைப்படங்களைப் பொறுத்த வரையும் இதே நிலையே. *Hollywood* படங்கள் 1980களில் 30% ஆன வருமானத்தையே வெளிநாடுகளில் இருந்து பெற்றன. இன்று 50% ஆன வருமானத்தை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்கின்றன. இதில் 70% ஆன வருமானத்தை ஐரோப்பாவில் இருந்து பெற்றுக் கொள்கிறது.

இதற்கு மேலும் ஒரு உதாரணம் *'Titanic'* - கவிழ்ந்த கப்பல் கரையேற்றியது பல கோடிகளை. சீனாவில் 4.3 *Million* அனுமதிச் சீட்டுகள் விற்கப்பட்டுள்ளன. பிரான்ஸின் - பிரெஞ்ச் திரைப்படங்களின் வருமானம் 34.5% இலிருந்து 27% இக்கு குறைந்தது (*Titanic* வெளிவந்த 1988இல்)

**புதிய கலாச்சாரத்தால் எழும் பாதிப்புகள்**

1. புதிய மொழி அல்லது தேசிய மொழியாக - ஆங்கிலம். ஆங்கிலத்தின் வளர்ச்சி சுய மொழிகளின் அழிவுக்குக் காரணமாகிவிடும்.

2. புதிய கலாசாரம் - உ+ம்: உணவு *McDonalds, Kentucky*, Coca - Cola -

*a*. இவற்றின் உற்பத்திக்கான மூலப் பொருட்களின் தேவை இதன் மூலம் இலாபம் கூடப் பெறலாம் என்ற ஐதீகம். பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யாது இதற்காக மாற்றீடு செய்தல். இறுதியில் இரண்டுக்கும் வெளிநாடுகளை அதிகம் தங்க வேண்டிய நிலை ஏற்படும்.

*b*. இதன் விற்பனைக்காக பல புதிய விளம்பர யுத்திகளை கையாளல். இதன் மூலம் இதன் தேவையை அதிகரித்தல். நடிகையின் கைகளில் *Coca Cola* போத்தல். அல்லது *Cricket* வீரர் *Coca Cola* அருந்தியதால் தான் நூறு ஓட்டங்களைப் பெற்றார் என்ற விளம்பரம்.

3. கலாசார அழிவு - பாலியல் உறவு முறைகள் தொடங்கி பல கலாசார வழுக்காறுகள் தனித்தன்மையை இழக்கின்றன. இதன் மூலம் பல புதிய சமுகச் சிக்கல்களை உருவாக்கின்றன. இதுவும் ஒரு வகையில் பொருளாதார தேக்கத்தையே அதிகரிக்கின்றது.

**தொலைக்காட்சிக் குறிப்பு**

*CNN, NBC, BBC* போன்றன வெளிநாட்டுச் சந்தைகளை பிடிப்பதற்கு போட்டியிடுகின்றன. அதே போன்று கனடாவும். கனடாவின் சந்தை சிறியது. அமெரிக்காவுக்கு அடுத்ததாக வெளிநாடுகளுக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விற்பதில் கனடா முன்னணியில் உள்ளது. இவை யாவும் தங்களது அரசியல் கருத்துக்களை விற்பதுடன். கலாசாரப் பொருட்களையும் விற்கின்றனர். *Young and Restless, Saviour, Temptation Island* போன்ற நிகழ்ச்சிகளின் பாதிப்புக்களை இன்று இந்தியத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் காணக் கூடியதாகவுள்ளது. இது ஒரு கலாசாரப் போருக்கு வித்திட்டுள்ளது.

1. இதில் அமெரிக்கா தனது கருத்துக்களை உலகெங்கும் பரப்ப முற்படுகிறது.

2. ஏனைய மேற்கத்திய நாடுகள் தமது பொருட்களை / கருத்துக்களை வளர்த்து வரும் நாடுகளில் விற்பனை செய்ய முயல்கின்றனர். இறுதி வெற்றி அமெரிக்காவுக்கே *NTO* போன்ற அமைப்புக்கள் அமெரிக்காவுக்கு சாதகாமாக பல தடவைகளில் கனடா. பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு எதிராகவும் செயற்பட்டுள்ளனர் / செயற்படுகின்றன.

இறுதியாக முன்னாள் கனடிய பிரதம மந்திரி *Kim Campbell* பின்வருமாறு கூறினார். உலகம் அமெரிக்காவில் பரவுவதை தவிர்த்து. அமெரிக்கா உலகெங்கும் பரவிட்டது. இது பயங்கரமானது.

-வானரன்-


**OODAM MAINTENANCE WORKS**

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



**Neelam SILK**

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீ சி
ல ல்
ம் க்



புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)

☎: (416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

# விண்வெளி

**- தருபவர் - கனி**

**அந்நியர்கள்:- 78**



*SETI - The Search for Extra Terrestial Intelligence* என்பதன் சுருக்கம். இது ஒரு அமைப்பாகும். தமிழில் கூறுவதானால் அந்நியர்களை - ஏலியன்களை தேடுவோரின் அமைப்பு எனக் கூறலாம். இவர்கள் வானில் பல பாகங்களிலும் செய்திகளை அனுப்பி ஏலியன்களைத் தேடுகின்றார்கள். புதுப்புது உத்திகளைப் பாவித்து இவர்களது தேடுதல்கள் நடக்கின்றன. எந்தவொரு. தமக்கு அனுசரனையான புதிய கண்டுபிடிப்புகளையும் இவர்கள் பாவிப்பதற்குத் தயங்குவதில்லை. இந்த அமைப்பின் செயற்பாடுகளைப் பற்றிப் பார்ப்போம்.

1950களில் றேடியே வானியல் ஆரம்பமாகப் பிரபல்யமடையத் தொடங்கியது. அக்காலத்தில் தான் றேடியோ தொலைகாட்டிகளை. ALEIN ஏலியன்களுடன் தொடர்பு கொள்ளப் பாவிக்கலாம் என்ற எண்ணம் ஏலியன் ஆய்வாளர்களிடையே உதயமாகியது. 1959ஆம் ஆண்டில் SETI ஆனது உருவாக்கப்பட்டது. இதன்படி நமது பூமியில் இருந்து சில செய்திகளை விண்வெளிக்கு றேடியோ சமிக்கைகள் வடிவில் அனுப்புவது. ஏலியன்கள் இருந்து, அவை அதிபுத்த ஜீவிகளாக இருக்கும் பட்சத்தில் இந்த றேடியோ சமிக்கைகளைப் பெற்று அவற்றைத் திருப்பி எமக்கு அனுப்பலாம். இவ்விதமாகத் திரும்பி வரும் றேடியோ சமிக்கைகளை பூமியில் இருப்பவர்கள் பெற்றுக் கொண்டு அந்த ஏலியன்களின் செய்தியை அறியலாம். இதன் மூலம் ஏலியன்கள் பற்றிய மர்மத்தை அறியலாம்.

இது இலகுவான விடயம் அல்ல. ஏராளமான செலவில் இந்த நடவடிக்கையானது தொடங்கப்பட்டு மிக உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது. ஏலியன்கள் பற்றிய சாதகமான சமிக்கை ஏதாவது கிடைப்பின் அக்காலப் பகுதியில் அதுவே மிகப்பெரிய புதினமாக இருக்கும். அரசியல்வாதிகள். மதவாதிகள், விஞ்ஞானிகள், இராணுவத்தினரென பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் தத்தம் துறைகளுக்கு ஏற்ப இந்த நிகழ்வை எதிர் நோக்குவார்கள் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஏலியன் தொடர்பு ஏதாவது கிடைத்தால் அதற்குப் பதில் அனுப்ப வேண்டுமா? அப்படிச் செய்வது ஒரு வேளை எதிர்காலத்தில் எமக்கு ஆபத்தாய் வந்து முடிந்துவிடுமா? அல்லது தொடர்புகளின் ஊடாக நமது அறிவியல் நிலையை உயர்த்திக் கொள்ளலாமா? இது போன்ற பல எதிர்காலக் கேள்விகளைக் கூட இன்றே கேட்டுக் கொள்ளுகின்றார்கள் விஞ்ஞானிகள்.

இது போன்ற பல கேள்விகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஆங்கிலப்படம் தான் "இன்டிப்பென்டன்ஸ் டே" ஏலியன்களை பற்றி வந்த படங்களிலேயே என்னை மிகவும் கவர்ந்த படம் இது என்றே கூறுவேன். ROSWEL விவகாரம். AREA 51. போன்ற ஏலியன் மர்மங்கள் கூட இதிலே காட்டப்பட்டுள்ளது. ஏலியன்கள் பற்றிய விடங்களில் ஆர்வம் உள்ளவர்கள் இப்படத்தை பார்க்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.


1959 இல் இருந்து பல SETI PROJECT கள் பலரால் தொடங்கப்பட்டு வான்பரப்பு மிக அவதானமாக அவதானிக்கப்படுகிறது. Project OZMA, Project CYCLOPS, Project PHOENIX என்பவை அவற்றுள் பிரபலமானவை. 1992 இல் NASA இனால் ஆரம்பிக்கப்பட்ட Project PHOENIX ஆனது அரசியல்வாதிகளின் தலையீட்டினால் இரத்துச் செய்யப்பட்டது. ஆயினும் விஞ்ஞானிகளின் முயற்சியினால் அரசாங்கம் இல்லாத வேறு தனியார்களின் பண உதவியுடன் மீண்டும் Project PHOENIX ஆரம்பிக்கப்பட்டு. மிக நேர்த்தியாக பூமிக்கு வெளியில் இருந்து வரும் சமிக்கைகள் அவதானிக்கப்படுகிறது. நமது பூமிக்கு வெளியில் இருந்து பல்வேறு வகையான இயற்கையில் உண்டான றேடியோ சமிக்கைகள் பூமிக்கு வருகின்றன. இவற்றில் இருந்து வேறுபட்டு செயற்கையான றேடியோ சமிக்கைகள் ஏதாவது பூமிக்கு வருகின்றனவா என்றே இந்த SETI அமைப்புகள் பார்க்கின்றன. ஆய்வு செய்கின்றன. இதற்காக பெருமளவு பணத்தைச் செலவிடுவதுடன் நீண்ட நெடுங்காலம் காத்திருக்க வேண்டும் என்பதும் இந்த SETI அமைப்பினருக்குத் தெரியும். ஒருவேளை 100 அல்லது 1000 வருடங்கள் கூட ஏலியன் சமிக்கைகள் ஏதாவது வருகிறதா எனப் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும் என்றும் கூட இந்த அமைப்புகள் கூறுகின்றனர்.

சரி இந்த முயற்சி உண்மையிலேயே பயனளிக்குமா? இது வரையில் ஏதாவது சாதகமான அல்லது புது உத்வேகத்துடன் செயற்படக் கூடிய விதமான சமிக்கைகள் கிடைத்துள்ளனவா? வரும் காலங்களில் இது பற்றிப் பார்ப்போம்.


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408



**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 128**

**இடமிருந்து - வலம்**

1. தமிழீழத் தலைவரும் இல்ங்கைப் பிரதமரும் கைச்சாத்திட்ட ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது.
2. திரவத்தில் இருந்து அழுக்கை நீக்கு
3. சதங்கை
5. மேலதிகமானது
6. வசப்படுத்தல்
7. வரை
8. ஏங்கு
10. மூங்கில்
11. மதுரையை எரித்தார்

**மேலிருந்து - கீழ்**

1. பெருமகிழ்ச்சி
4. ஒரு வகை சிப்பி
5. உப்பு சுவை (கீழ் - மேல்)
7. பணிவு (கீழ் - மேல்)
9. ஆகாயம்
10. பனையில் எடுக்கப்படுவது (கீழ் - மேல்)
11. பல் நிகழ்வுகளின் கலவை (கீழ் - மேல்)
12. நீர் நிலை ஒன்று (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MARCH 24, 2002க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.



**127இல் வெற்றி பெற்றோர்**

1) V. Jeevan, Toronto. Ont.
2) S. புண்ணியமூர்த்தி, Donmills. Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!


* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**



# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் பொருளியல்



### 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப்பத்திரங்களைப் பூர்த்தி செய்தல்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**இவ்விதழில் பொதுவாக இருக்கக் கூடிய கேள்விகளையும் அதற்கான விடயங்களையும் பார்ப்போம்.**

**1.எவ்வளவு RRSPக்கு செலுத்தலாம்?**

நீங்கள் எவ்வளவு தொகை வேண்டுமென்றாலும் உங்கள் RRSP திட்டங்களில் இடலாம். ஆனால் ஒரு தொகைக்கு மேலே உங்கள் தொகையை வருமான வரித் தொகையை குறைப்படுத்தற்காக பயன்படுத்த முடியாது. அதே நேரத்தில் ஒரு தொகைக்கு மேலே உங்கள் பணத்தை இடும்போது அந்த மேலதிக தொகைக்கு வரி செலுத்த வேண்டி இருக்கலாம்.

உங்களது 2001ஆம் ஆண்டிற்கான அதிகூடிய RRSP கழிவுத் தொகையாக பதின்மூவாயிரத்து ஐந்நூறு ($13.500) அல்லது 2000 ஆண்டின் வருமானத்தின் பதினெட்டு (18%) வீதமாகும். இதில் எந்தத் தொகை அதிகமானதோ அந்தத் தொகையை RRSP இல் இடக்கூடிய அதிகூடியதாக கொள்ளலாம். உங்கள் வேலை இடத்தில் பிரத்தியேகமான சேமிப்புத் திட்டம் இருந்தால். இத் தொகை மேலும் குறைவாக இருக்கும்.

**2. ஒவ்வொரு வருடமும் RRSP செலுத்தக் கூடிய தொகையை நானாகக் கவனிக்க வேண்டுமா?**

இல்லை. அரசாங்கம் (CCRA FORMALY REVENUE CANADA) உங்களது தொகையைக் கணிப்பிட்டு அதனை உங்களது முன்னைய வருடத்தில் நீங்கள் தயாரித்து அனுப்பிய வரிப்பத்திரங்களை அரசு திருப்பி அனுப்பும் போது (Tax Assessment அதில் உங்களுடைய RRSP தொகை குறிப்பிட்டு இருக்கும்)

**3. எப்பொழுது RRSP இல் பணம் வைப்புச் செய்யலாம்?**

வருடத்தின் எந்த நேரத்திலும் RRSP இற்கு பணம் வைப்பில் இடலாம். ஆனால் ஒரு வருட ஆரம்பித்தில் இருந்தே செலுத்தி வரும் தொகையால் தொடரும் வட்டி. வருமானம் ஒரு வருடத்தில் இறுதியில் செலுத்தும் பணத்தை விட அதிகமாக இருக்கும். எனவே வருட ஆரம்பத்தில் வைப்பீடு செய்வது சிறந்தது.

உதாரணமாக - ரகு பத்தாயிரம் டொலர்களை ($10.000) தனது RRSP திட்டத்தில் வருடாந்தம் செலுத்துக்கிறார் என்றால். அது எட்டு வீதம் (8%) வட்டி வீதத்தில் வர இருக்கும் தருணத்தில் எவ்வளவு வருட ஆரம்பத்தில் நீங்கள் செலுத்தும் $10.000 அல்லது 20 வருடங்களில் $494.000 டொலர்களாக கொடுக்கின்றது. அதே நேரத்தில் இத்தொகையை ஒவ்வொரு வருட இறுதியிலும் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அதன் வளர்ச்சியானது அதே 20 வருடத்தில் $458.000 டொலர்களாக மட்டுமே இருக்கின்றது. எனவே ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்தில் அதே தொகையை வைப்பில் இடுவதன் மூலம் உங்களுக்கு $36.000 டொலர்கள் அதிகமான கிடைக்கின்றது.

**குறிப்பு:** இந்த வருடத்திற்குரிய RRSP செலுத்தக் கூடிய கடைசி நாள் மார்ச் 01. 2002.

இவ்வாறான பல வினாக்கள் உங்களுக்கு RRSP பற்றி இருக்கலாம். எனவே இவை சம்பந்தமான உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை எங்களுக்கு நீங்கள் தெரியப்படுத்தி உங்களுக்கு தரக் கூடியதாக இருக்கும். (தொடரும்)


மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


**Mark Markandu, CGA**
**Certified General Accountant**
**416 290 0946 / 416 834 6660**
**e-mail:**
**mark.markandu.cga@on.aibn.com**



## LADY DRIVERS OF CANADA

- Driver's Education for all ages
- Driving instruction 7 days a week
- Early booking appointment 62,6
- Free pick - up & drop off
- Defensive driving techniques



சகலவயதினருக்கும் வாகனப்பயிற்சி . ஏழு நாட்களும் , விரைவான விதிப்பரீட்சைக்கான ஒழுங்குகள் ... அழையுங்கள்

: *NANTHAN* - Cell: 416-930-5619 Res: 416-493-3424


*(Professional Driving Instructor)*



மனவெளி கலையாற்றுக் குழு வழங்கும்

ஒன்பதாவது

# அரங்காடல்



இயூஜீன் அயனெஸ்கோவின்

• **நாற்காலிகள்**

நெறியாள்கை: P. விக்னேஸ்வரன்

மஹாகவியின்

• **புதியதொரு வீடு**

நெறியாள்கை: செல்வன்

நெறியாள்கை மேற்பார்வை: K.S. பாலச்சந்திரன்

| MARCH | MARCH | MARCH |
|---|---|---|
| 16 | 16 | 17 |
| SAT | SAT | SUN |
| 1:00pm | 6:30pm | 4:00pm |

**Markham Theatre for Performing Arts**

171 Town Centre Blvd., Markham (Warden & Highway 7)

**Tickets available at (905) 305-SHOW**

தொடர்புகளுக்கு: (416) 269-0078, (416) 429-8854

**www.manaveli.org**

- அரங்க நிர்வாகத்தினரின் இறுக்கமான விதிமுறை: நாடகமொன்று நிகழ்ந்து கொண்டிருக்கும்போது எவரும் அரங்கினுள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய குழந்தைகள் பராமரிப்பகம்

ஒன்பதாவது அரங்காடலுக்கு ஆதரவு தருவோர்

ROYAL LEPAGE — Tam Sivathasan, B. Sc. Eng. (416) 284-4751, (416) 804-3443

GNANAM STUDIOS — 2381 Eglinton Ave. E — 416-750-8118

A MAX AUTOMOTIVE — 185 Midwest Rd., 416-285-8425

இசையரங்கம் வழங்கும் ஜூன் 9ம் திகதி இசைக்கு ஏது எல்லை -4

உலக தமிழோசை • காலாண்டு சஞ்சிகை • 416-282-8059

MANUEL JESUDASAN — Barrister, Solicitor & Notary Public — 416-444-8070

RJ Multi Litho — 4090 RIDGEWAY DR., Unit 18 — 905-569-7883

media sponsors

tvi · CTBC · TCBC கீதவாணி · CTR · உதயன் · ஈழநாடு · நிகரி · TV CEYLON

எறிகின்ற கடலென்று மனிதர்கள் அஞ்சார்: எது வந்ததெனின் என்ன அதை வென்று செல்வார்




* கலை
* கணணி
* விளையாட்டு
* ஓவியம்
* கட்டுரை
* மருத்துவம்
* குறிப்புகள்
* நகைச்சுவை
* கவிதை
* விண்வெளி
* செய்திகள்
* கருத்துப்படம்
* சிறுகதை
* உயிரியல்
* அரசியல்
* பொருளாதாரம்
* வரலாறு
* சமகால நிகழ்வுகள்
* சமூகவியல்
* சினிமா
* நிழற்படம்

**ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.**

அனுப்ப வேண்டிய முகவரி *P.O. Box 37527,*
*31 Tapscott Road,*
*Toront, ON,*
*M1P 5P9*
*Canada*

***Telephone:*** ***416-.282-8059***
***Fax:*** ***416 -282-4978***
***e.mail:*** ***info@ulakathamiloszai.com***




நகைசசுவைத் தொடர்....
62



# "ராசம்மாவின் ராஜ்யம்"

-கலகலப்பு தீசன்



சிரித்துக் கொண்டே வாழவேண்டுமென்று
சிலர் நினைக்கின்றனர்.
அழுது கொண்டு தான் வாழலாம் எனப் பலர்
அனுபவத்தில் கண்டுள்ளனர்.



(கலகலப்பு மொழி)

நீண்ட நேரம் ஒற்றைக்கால் தூக்கியபடி மறுகால் விறைக்க பெரிய மீனுக்காக காத்து.... நேரத்தை வீணடிக்கிறது கொக்கு....






எவ்வளவோ உயரத்தில் பறந்தும் கடலில் சிறு மீனைக் கண்டதும் இலபக்கென்று கொத்தி பசியைப் போக்கிறது....பருந்து.... வல்லூறு.... கழுகு....

யாரோ வைத்திருக்கும் உணவைத்.... தட்டிப் பறித்து உண்ணுகிறது.... தந்திரம் மிகுந்த காகம்....

தான் பகல் முழுவதும்.... தூங்கி. இரவில் அமைதியாய் தூங்கும் உயிரினத்தை கொத்தி தின்கிறது (கோட்டான்) ஆந்தை.



இலவ மரத்திலுள்ள காய் பழுத்தால் சுவைத்து உண்ணலாம் என காத்திருந்து ஏமாறுகிறது.... கிளி....



